# IN THE COURT OF II ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, THANJAVUR

## DEPOSITION OF WITNESS

## OS. No. 250/2023 நாள்.24.02.2026

### PW1- திரு. சவரிமுத்து, த/பெ. திரு.மரியசூசை

பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை

நான் என்ன பணியிலிருந்து ஒய்வு பெற்றேன் என்றால் துப்பாக்கி தொழிற்சாலையில் துப்பாக்கிகளை சோதனை பார்க்கும் வேலை பார்த்து ஒய்வு பெற்றேன். என்ன பரிகாரத்திற்காக வழக்கு போட்டேன் என்றால் சொத்தை மீட்டு கொடுக்கசொல்லி வழக்கு போட்டுள்ளேன். வழக்குரையில் உள்ள விபரம் தெரியுமா என்றால் தெரியும். வழக்குரையில் 1லிருந்து 6 பத்தி வரைக்கும் என் தங்கைக்கு மூன்று திருமணம் நடந்ததாகவும், அதற்கு நான்தான் செலவு செய்தேன் என்று சொல்லியுள்ளேன் என்றால் இரண்டு திருமணம்தான். என் எதிர்வழக்குரையில் பத்தி 10 இல் 40 நாள்கள் என்று உள்ளது என்றால் அவ்வாறு உள்ளது தவறு. நான் என் தங்கை மீது உள்ள கோபத்தால் பல்வேறு தேதிகளில் பணம் கொடுத்ததாக பொய்யாக சொல்லி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 2008 இல் கிரையம் பெற்றேன் என்றால் ஆமாம். நான் கிரையம் பெறுவதற்கு முன்பே அங்கு கூரை வீடு இருந்தது என்றால் ஆமாம். கூரை வீட்டை மறைத்து காலிமனை என்று கிரையம்செய்தேன் என்றால் ஆமாம். கிரையத்தொகை எவ்வளவு என்றால் 97,200 ஆகும். அது எத்தனை சென்ட் இடம் என்றால் 3 சென்ட். அந்த இடம் அவருக்கு அரசாங்கத்தால் கொடுக்கபட்டது என்றால் ஆமாம். என்னுடைய எதிர்வழக்குரையில் அரசாங்கத்தில் கொடுக்கவில்லை என்று சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. சொத்துவிபரத்தில் அரசாங்கத்தால் வழங்கபட்டது என்று சொல்லவில்லை என்றால் ஆமாம். அதில் பட்டா என்றுதான் உள்ளது என்றால் ஆமாம். அந்த பட்டா 1991 இல் கொடுக்கபட்டது என்றால் ஆமாம். 2008 இல் கிரையம் என்றால் ஆமாம். 2001இல் என் தங்கை தன் மகன் பெயருக்கு உயில் எழுதியிருந்தார் என்றால் தெரியாது. அந்த அரசாங்கத்தால் கொடுத்த பட்டாவை இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. என்னுடைய வழக்குரையில் 8வது பத்தியில் 6.12.2001 இல் பதிவு பெற்ற உயில் ஆவணத்தை மோசடியாக பெற்றுள்ளார் என்று சொல்லியுள்ளேன் என்றால் ஆமாம். கல்வியறிவு இல்லாததால் ஏமாற்றி பெற்றுள்ளார் என்று சொல்லியுள்ளேன் என்றால் ஆமாம். எனக்கும் எனது சகோதரிக்கும் சுமூக உறவு இருந்திருந்தால் அந்த உயில் பற்றிய சங்கதி எனக்கு தெரிந்திருக்கும் என்றும் கிரையம் நான் ஏமாற்றி வாங்கியுள்ளேன் என்றால் சரியல்ல. 2017இல் நான் எப்போது அவருக்கு வீடுகட்டி கொடுத்தேன் என்றால் அரசாங்கத்தில் இடத்தை

அவர்களுக்கு ஒதுக்கியஉடன் ஒரு கொட்டகை போட்டு கொடுத்தேன். அதன்பிறகு நான் வீடு கட்டி கொடுக்கவில்லை என்றால் ஆமாம். தற்போது என்னிடம் காண்பிக்கபடும் வீடுகட்டும் திட்டத்தில் என் சகோதரிக்கு வீடு கட்ட ஒதுக்கபட்டது என்றால் ஆமாம். கிரையம் என்பெயரில் ஏற்பட்டபிறகு என் தங்கை பெயரில் 2012 இல் மின்னிணைப்பு பெற்றுள்ளேன் என்றால் ஆமாம். தற்போது என்னிடம் காண்பிக்கபடுவது 31.8.2020 இல் என் தங்கைபெயரில் கட்டிய வீட்டுவரி ரசீது என்றால் ஆமாம் அது **பி.சா.ஆ.1** ஆகும். தற்போது என்னிடம் காண்பிக்கபடும் புகைபடங்கள் தாவா சொத்திலுள்ள வீட்டை காட்டக்கூடியது என்றால் ஆமாம். அதில் பிரதமமந்திரி திட்டத்தின் வீடு கட்டபட்டதாக வாசகம் உள்ளது என்றால் ஆமாம். அந்த மூன்று புகைபடங்கள் **பி.சா.ஆ.2** வரிசை. நான் சொன்னதுபோல் தாவா சொத்தில் நான் எந்தவீடும் கட்டவில்லை என்றும் என் தங்கை படிப்பறிவு இல்லாதவர் என்பதால் அவரை ஏமாற்றி ஆவணம் பெற்றுள்ளேன் என்றும் சொன்னால் சரியல்ல. தாவா தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல. நான் கோரியுள்ள பரிகாரம் கிடைக்ககூடிதல்ல என்றும் பிரதிவாதி கோரியுள்ள பரிகாரம் கிடைக்ககூடியது என்றும் சொன்னால் சரியல்ல.

**நான் சொல்ல என் உத்திரவுப்படி**
**தட்டச்சிடப்பட்டு, என் முன்னிலையிலும்,**
**மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக்**
**காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று**
**ஒப்புக்கொள்ளப்பட்டது.**

NAGARAJAN Digitally signed by NAGARAJAN Date: 2026.02.24 17:47:26 +0530

**2வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,**
**தஞ்சாவூர்.**